NDB bank
Our Commitment. **Your Success.**

பெயர் நியமனப்படிவம்

(நடைமுறைக் கணக்குகளுக்கும்
கூட்டுக்கணக்குகளுக்கும் செல்லுபடியாகாது)

முகாமையாளர்
நஷனல் டிவலப்மென்ட் பாங்ீடூஊ
(கம்பெனிப் பதிவு இல.ீஞ 27)
இல. 40 நவம் மாவத்தை
கொழும்பு 02.

திகதி: _____

ஐயா/அம்மணி
கணக்கு இலக்கம்/ இலக்கங்கள்/ காப்பு வைப்பு பெட்டக இலக்கம்/ இலக்கங்கள்

1. ..... என்னும் முகவரியைச் சேர்ந்த (கணக்கு வைத்திருப்பவரின் / காப்பு பெட்டகம் வைத்திருப்பவரின் முகவரி) ..... (கணக்கு வைத்திருப்பவரின்/ காப்பு வைப்பு பெட்டகம்வைத்திருப்பவரின் முழுப் பெயர்) ஆகிய நான் உமது வங்கியுடன் மேலேயுள்ள கணக்கு/ கணக்குகள்/ காப்பு வைப்பு பெட்டகம்/ பெட்டகங்களை பராமரிக்கின்றேன் என இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

2. 1993 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறை கோவை (திருத்தச்) சட்டத்தின் 544 (1) ஆம் பிரிவின் நியதிகளின்படி பெயர்குறித்து நியமிப்பது எனது விருப்பமும் ஆசையுமாகும்.

நியமத்தவரின் முழுப்பெயர்	நியமத்தவரின் வதிவிட முகவரி	தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம்	தேசிய அடையாள அட்டை இலக்கம்	எனது நிலுலவகளை நியமத்தவர்களுக்கு பரிந்து வழங்குவதற்கான % அடிப்படை (காப்பு வைப்பு பெட்டகங்களுக்கு ஏற்புடையதாகாது)
1				மு
2				மு
3				மு
4				மு

2.1 நான் இறக்கும் பட்டசத்தில் காப்பு வைப்பு பெட்டகத்திலுள்ள அனைத்து அசையும் சொத்துக்களையும் அத்துடன்/ அல்லது மேற்சொல்லப்பட்ட கணக்கு/ கணக்குகளில் வரவுவைக்கப்பட்டுள்ள பணத்தையும் பெறுவதற்கும் அத்துடன் இதற்கு முன்னரோ அல்லது பின்னரோ என்னால் ஆக்கப்படும் இறுதிவிருப்பாவணத் தன்மையானதான ஏதேனும் மரண சாதனத்தில் அல்லது எழுத்தாவணத்தில் இதற்கு முரணாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தகைய பெயர் நியமனம் எனது இறப்பின்போது பயனுறுதல் வேண்டும் எனவும் இந்த பெயர் நியமனம் இலங்கைச் சட்டத்திற் அமைந்ததாதல் வேண்டும் என்பதையும் நான் புரிந்து கொள்கின்றேன்.

3. இப்பெயர் நியமனம் ஆனது என்னால் செய்யப்பட்ட எவையேனும் முன்னைய பெயர் நியமனங்களை இல்லாதொழிக்கின்றது என்பதுடன் உங்களுக்கு எழுத்து மூலமாக வழங்கப்படும் அறிவித்தல் மூலமாகவோ அல்லது என்னால் உரியமுறையில் செய்யப்படும் அடுத்துறு பெயர் நியமனத்தின் மூலமாகவோ நான் அதை வெளிப்படையாக இல்லாதொழிக்கும் வரை நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

4. எனது இறப்புத் தேதியில் வங்கியினால் இதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட நியமத்தர்/ நியமத்த்களிற்கு மேற்சொல்லப்பட்ட கணக்கு/ கணக்குகளிலுள்ள நிலுவைக்கொடுப்பனவானது சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 544(5) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய கணக்கு/கணக்குகள் தொடர்பில் வங்கியின் கடப்பாடுகளை முழுமையாகவும் முற்றிலுமாகவும் நிறைவேற்றுவதாக இருத்தல் வேண்டும் என நான் வெளிப்படுத்துகின்றேன்.

5. எனது மேற்சொல்லப்பட்ட காப்பு வைப்பு பெட்டகம்/ பெட்டகங்களின் விடயத்தில், எனது இறப்புத்தேதியில் அதன் உள்ளடக்கங்கள், அனைத்து நியமத்தர்களின் முன்னிலையில் நியமத்தரிடமோ அல்லது அனைத்து நியமத்தர்களிடமோ கையளிக்கப்படவேண்டும் என நான் வெளிப்படுத்துகின்றேன். இது சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 544(5) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு வங்கியின் கடப்பாடுகளை முழுமையாகவும் முற்றிலுமாகவும் நிறைவேற்றுவதாக இருத்தல் வேண்டும்.

6. எனக்கும்/ எனது வாரிசுகளுக்கும் எந்தவித அறிவிப்பும் இன்றி, வங்கிக்கு நான் செலுத்த வேண்டிய கடன்களை தீர்க்க நீங்கள் உரித்துடையவர்கள்; அத்தகைய கடன்கள் உண்மையானதாகவோ அல்லது தற்செயலானதாகவோ, முதன்மையானதாகவோ அல்லது துணைக்கடன்களாகவோ, தனித்தனியானதாகவோ, அல்லது கூட்டுக் கடன்களாகவோ இருக்கலாம் மற்றைய கணக்குகளில் உள்ள மீதி எது எவ்வாறிருப்பினும் மற்றைய கணக்கின் வரவு மீதியிலிருந்து பணத்தை மாற்றுவதன்மூலம் இந்தக் கடன்களைத் தீர்க்கலாம். கடன்கள் ஒரே நாணயத்தில் வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. எனது வங்குறோத்து நிலையால் அல்லது இறப்பால் வங்கியின் உரிமை பாதிக்கப்படாது.

நியதிகளும் நிபந்தனைகளும்

1. ஏற்புடையற்பாலதான சட்டங்கள் மற்றும் வங்கியின் பொதுவான ஈடுசெய் உரிமைக்கு அமைய, கணக்கு வைத்திருப்பவர்/ காப்பு வைப்பு பெட்டகம் வைத்திருப்பவரின் இறுதிவிருப்பாவணத்தில் உள்ளடக்கப்பட்டவைக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் இந்தப் பெயர் நியமனமானது நடைமுறைக்குவருதல் வேண்டும்.
2. இந்த பெயர் நியமனமானது பின்வரும் சந்தர்ப்பங்களில் இல்லாதொழிக்கப்படும்

   (அ) கணக்கு வைத்திருப்பவர்/ காப்பு வைப்பு பெட்டகம் வைத்திருப்பவரின் வாழ்நாளில் நியமத்தர்/ நியமத்தர்களில் எவரேனும் ஒருவர் இறப்பதன்மேல்

   (ஆ) கணக்கு வைத்திருப்பவரினால்/ காப்பு வைப்பு பெட்டகம் வைத்திருப்பவரினால் பெயர் நியமனத்தை இல்லாதாக்குவதற்கான எழுத்துபூர்வ அறிவித்தல் ஒன்றின்மூலம்

   (இ) அடுத்துறும் பெயர் நியமனத்தின் மூலம் கணக்கு வைத்திருப்பவரால்/ காப்பு வைப்பு பெட்டகம் வைத்திருப்பவரினால் முறையாகச் செய்யப்பட்டு வங்கிக்கு வழங்கப்படுவதன்மூலம்.

3. இந்தப் பெயர் நியமனத்தை நடைமுறைப்படுத்தமுடியாத பட்சத்தில் சட்ட நடவடிக்கைமுறைக்கு பின்னர் அதற்கான சட்ட முறையான ஆள்/ ஆட்களுக்கு நிதிகள்/ அசையும் சொத்துக்கள் செலுத்தப்படும்.
4. அடையாள எண்பிப்பை காண்பித்ததன்மேல் மட்டுமே நியமத்தர்/ நியமத்தர்களுக்கு கொடுப்பனவு செலுத்தப்படும் என்பதுடன் அத்தகைய அடையாளத்தை உறுதிப்படுத்த வங்கியினால் தேவைப்படுத்தக்கூடியவாறான ஏதேனும் தகவல்/ ஆவணங்களை கோருவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.
5. காப்பு வைப்பு பெட்டகம் ஒன்றிற்கான பெயர் நியமனத்தின் போது, அதில் வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் நியமத்தரின் அடையாள எண்பிப்பை காண்பித்தால் மட்டுமே அவரிடம் வழங்கப்படும் (ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர்கள் இருக்கும் பட்சத்தில்,) எல்லா நியமத்தர்கள் முன்னிலையிலும் அவர்களின் அடையாள எண்பிப்பை காண்பித்தால் மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படும். மேலும் அத்தகைய அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு வங்கியினால் தேவைப்படுத்தக்கூடியதான ஏதேனும் தகவல்/ ஆவணங்களை கோருவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

_____
கையொப்பம்

(.....)
கணக்கு வைத்திருப்பவரின்/ காப்பு வைப்பு பெட்டகம் வைத்திருப்பவரின் முழுப்பெயர்)

இதற்கத்தாட்சியாக இதிலும் இன்னொன்றிலும் ..... இல் 20..... ஆம் ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாளாகிய இன்று எமது கையொப்பங்களை இட்டுள்ளோம்.

சாட்சிகள்

	முழுப்பெயர்	**தனிப்பட்ட முகவரி**	**பதவி/ தொழில்**	**கையொப்பம்**	**தே.அ.அ இல/ ஊ.சே.நி (நீங்கு) இல**
1					
2					

நியமனப் படிவத்தைப் பூர்த்திசெய்வதற்கான அறிவுறுத்தல்கள்

(1) தனியாள் கணக்குகள்மீது மட்டுமே வங்கியினால் பெயர் நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

(2) நடைமுறைக் கணக்குகளுக்கு மற்றும் கூட்டுக் கணக்குகளுக்கு பெயர் நியமனங்கள் ஆனவை செய்யப்படலாகாது.

(3) பெயர் நியமனங்கள் ஆனவை தனியாட்களின் காப்பு வைப்பு பெட்டகங்களிற்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, ஒன்றுக்கு மேற்பட்ட நியமத்தர் இருந்தால், காப்பு வைப்புப் பெட்டகத்தின் உள்ளடக்கங்களை ஏதேனும் சதவீத அடிப்படையில் நியமத்தர்களுக்கு கையளிப்பதற்கான அறிவுறுத்தல்களை வங்கி ஏற்றுக்கொள்ளாது.

(4) கணக்கு வைத்திருப்பவரின் கையொப்பம் இரண்டு சாட்சிகளால் சாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அவர்களில் ஒருவர் கிளை முகாமையாளராக/ உதவிக் கிளை முகாமையாளராக/ உறவு முகாமையாளராக இருத்தல் வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக, மூன்றாம் திறத்தர் (3 ஈன ீயசவல) சாட்சியாக கையொப்பமிட்டால், அவர்/ அவள் வாடிக்கையாளருடன் (நியமனம் செய்பவர்) கிளைக்கு வருதல் வேண்டும். நியமத்தர் ஒருவர் சாட்சியாக கையொப்பமிடமுடியாது.

(5) நியமனப் படிவம் இரண்டு அடுக்குகளைக் கொண்டது மற்றும் காபன் பூசப்பட்டது.

(6) மூல மற்றும் நகல் பிரதி ஆகிய இரண்டிலும் கணக்கு வைத்திருப்பவர் மற்றும் சாட்சிக்காரர் கையொப்பமுடுதல் வேண்டும்.

(7) மூலப் பிரதியானது கணக்கு திறப்பு பணிப்பாணை/ காப்பு வைப்பு பெட்டக பணிப்பாணை உடன் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(8) நகல் பிரதியானது கணக்கு வைத்திருப்பவர்/ காப்பு வைப்பு பெட்டகம் வைத்திருப்பவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.